**செ.வெ.எண் : 06 / பிப்ரவரி** **நாள் : 03.02.2016**

**இராமநாதபுரம் மாவட்டம்**
**தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்**
**04.02.2016 முதல் 06.02.2016 வரை நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் மாவட்டப் பிரிவின் சார்பாக தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான வாலிபால், இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் 04.02.2016 முதல் 06.02.2016 வரை இராமநாதபுரத்தில் வைத்து நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கலந்து கொள்ள தமிழகம் முழுவதிலும் இருந்து ஏராளமான பல்கலைக் கழகங்கள் தங்களது அணிகளை பதிவு செய்துள்ளார்கள். 04.02.2016 அன்று காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியில் வைத்து அணி மேலாளர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் போட்டிகளுக்கான அட்டவணை தயாரிக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் சுமார் 700 வீரர் வீராங்கனைகளின் அணி வகுப்பு மரியாதையுடன் போட்டிகள் துவங்க உள்ளது. அணி வகுப்பு மரியாதையினை இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அன்வர்ராஜா அவர்கள் ஏற்றுக் கொண்டு முதல் வாலிபால் போட்டியினையும் முதல் மேசைப்பந்து போட்டியினையும் துவக்கி வைக்க உள்ளார்கள். நிகழ்ச்சியில் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியின் தாளாளர்கள் திரு.செல்லத்துரை அப்துல்லா, டாக்டர் திரு. சின்னத்துரை அப்துல்லா, கல்லூரி முதல்வர் முனைவர் மாரிமுத்து, சென்னை , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதுநிலை மேலாளர் திரு. வாழ்வீம ராஜா, மதுரை மண்டல முதுநிலை மேலாளர் திரு. தமிழ்ச்செல்வன் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர்ஜோதிசற்குணம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்கள் பயிற்றுநர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் நடுவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து அணிகளுக்கும் தங்குமிடம் மற்றும் உணவு செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டென்னிஸ் மற்றும் இறகுப்பந்து ஆகிய போட்டிகள் SDAT சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கிலும் , வாலிபால் மற்றும் மேசைப்பந்து ஆகிய போட்டிகள் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. அனைத்துப் போட்டிகளும் மின்னொளியில் நடத்திட இரவு பகலாக பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் முதல் இடத்தில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000/-ரொக்கப்பரிசும், இரண்டாம் இடம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 7,500/-ரொக்கப்பரிசும், மூன்றாம் இடம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/-ரொக்கப்பரிசுமாக சேர்த்து மொத்தம் ரூ.12,15,000/- ரொக்கப் பரிசாக வழங்கப்படவுள்ளது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்,

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**